Assistant Engineers in Highways Department

* 6 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there has been some irregular posting of Assistant Engineers in the City Roads Wing of the Highways Department; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு மு. கருணாநிதி : *(அ) இல்லை.*

(இ) இவ் வினா எழவில்லை.

Accident near Munroe Bridge

* 7 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state---

(*a*) whether three school-going children were killed on the 21st July 1967 as a result of an accident near Munroe Bridge in Chetput; and

(*b*) if so, the steps taken to offer protection from such accidents to school-going children?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : *(அ) விபத்தின் விளைவாகச் சிறுமி ஒருத்தி இறந்துவிட்டாள். மற்றும் இரு சிறுமிகள் படுகாய முற்றனர்,*

(இ) மன்றோ பாலத்தில் காலை 8 மணி முதல் 11 மணி, மாலை 4 மணி முதல் 7 மணி வரை சரக்குப் பெருந்துப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறிய நேரங்களில் ஏனைய வண்டிப் போக்குவரத்தை முறைப்படுத்தும் பொருட்டு அவ்விடத்தில் கூடுதல் போக்குவரத்துக் காவலர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர். பாலத்தை அகலப்படுத்துமாறும், நடந்து செல்வோருக்குத் தனி வழி அமைக்குமாறும் சென்னை மாநகராட்சிக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : *அந்தப் பாலம் மிகச் சிறிய பாலமாக இருப்பதாலும், லாரிகள் போக்குவரத்து அதிகமாக இருப்பதாலும் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. ஆகவே, லாரிப் போக்குவரத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் உத்தர விடுமா ?*

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : *பள்ளி நேரங்களில் லாரிப் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப் பட்டுள்ளது.*

• DR. H. V. HANDE : Sir, arising out of the answer given by the Hon. Minister, viz., that the Ministry has addressed the Corporation with regard to the expansion of the bridge, will the Hon. Minister tell us whether they have received any reply from

the Corporation and also the exact stage at which the matter stands. Also, will the Ministry insist on the Corporation to execute the scheme as early as possible?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசினர் சார்பில் மாநகராட்சிக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் பதில் வரவில்லை. உறுப்பினர் அவர்கள் யோசனைப்படி மிக விரைவாகச் செய்து முடிக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பாலம் கட்டி முடிக்க வேண்டுமென்றால் ஒரு வருஷம் ஆகும். அதுவரை போக்குவரத்துக்கு இடையூறாக இருக்குமென்பதால் உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அந்தக் குழந்தை இறந்தது லாரியில் அடிபட்டா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் அடிபட்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கேள்விக்குப் பதில் அளித்ததிலேயே லாரியினால் ஏற்பட்ட விபத்து என்று கூறப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : மன்றோ பாலத்தில் நடந்த விபத்தில் இறந்துபோன சிறுமியின் பெற்றோர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்களுக்கும் நஷ்ட ஈட்டை இந்த அரசாங்கம் தந்ததா? தரவில்லை என்றால் அதைத் தருவதற்கு இப்போதாவது யோசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனிப்பட்ட அந்த லாரிச் சொந்தக்காரரிடம் கேட்டு அவர் கொடுத்தாரா இல்லையா என்பது தெரியவில்லை. இது அரசாங்கத்தைப் பொருத்த விஷயம் இல்லை.

Invalid food

*8 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken to prevent the unauthorised sale of invalid food in the " Burma Market " in the First Line Beach in Madras City ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஜார்ஜ் டவுன் பகுதியைச் சேர்ந்த உணவுப் பங்கீட்டு அதிகாரியின் நேர்முக உதவியாளர் " பர்மா அங்காடித் தெருவில் " முன்னெச்சரிக்கையின்றிச் சோதனையிட்டபோது, குழந்தைகள்/வலாதோர் உணவுப் பொருள்கள் பல கைப்பற்றப்பட்டன. உரிய முறைப்படி ஒப்பம் பெற்றுக் கொண்ட பின்னர் அவை அதிகாரம் வாய்ந்த வணிகரிடம் ஒப்படைக்கப்பட்டன.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இந்தக் குழந்தைகள் உணவுப் பண்டங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அறவே நீக்கிவிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போதேகூட குழந்தைகள் உணவுப் பொருள்கள் சம்பந்தமாக முழுக்